# தட்டித் திறவுங்கள்!

அண்டைக்கொருநாள் ஒரு வீட்டை போயிருந்தனான். அங்கிருந்து Living Hall இல் இருந்து பல விடயங்கள் பற்றி கதைத்துக் கொண்டிருந்தோம்.

எம்மோடு கதைத்துக் கொண்டிருந்த ஒருத்தர் ஏதோ ஒரு புத்தகம் எடுத்து வருவதாகக் கூறி அருகில் இருந்த அறை ஒன்றின் கதவைத் திறந்தார். "ஆ...ஓ...sorry....' என்ற சத்தங் களுடன் அறைக்கதவு அடித்து சாத்தப் படுகின்றது.

பேய் அறைந்த மாதிரி திரும்பி வந்த அவரைப் பார்த்தா.. உள்ளே யாரோ உடுப்பு மாத்திக் கொண்டிருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றியது... (அதுக்காக... 'பேய் அறைஞ் சதை எப்பவாவது கண்டணீரோ? என்று மட்டும் கேட்டுப் போடாதையுங்கோ) அத்துடன் அவ ரைப் பார்த்தா பரிதாபமாகவும் தோன்றியது.

இப்படி அறைகளின் கதவுகளைத் தட் டாமல் அல்லது முன்னறிவிப்பு கொடுக்காமல் திடீரென திறக்கும் வழக்கம் எம்மில் பல பேருக்கு இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. எமது அன்றாட வாழ்வில் நாம் இதுபோன்ற பல சந்தர்ப்பங்களில் பாதிப்படை கின்றோம் அல்லது மற்றவர்களைப் பாதிப் படைய வைக்கின்றோம்.

அலுவலகத்தில் கதவு மூடியிருக்கும். ஆனால் அதைத் தட்டி அனுமதி பெறாமல் உள்ளே செல்லும் பல பேர் நம் மத்தியில் இருக்கிறார்கள்...

வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ உள்ள washroom களின் கதவைத் தட்டாமல் திறந்து முகம் சுழித்து மன்னிப்பு கேட்கும் மனிதர்கள் ஏராளம் இருக்கிறார்கள்.

Computerஇல் நாம் ஒரு முக்கிய மான அல்லது இரகசியமான ஒரு வேலையை முழுக்கவனத்துடன செய்து கொண்டி ருப்போம். திடீரென ஒருவர் சத்தம் போடாமல் வந்து computer க்கு முன்னால் நிற்பார்.

அதுமட்டுமல்லாமல் நாம் computerஇல் என்ன வேலை செய்கின்றோம் என்பதை அனுமதியின்றி அறியும் ஆர்வமாக இருப்பார்.

**புலன் பெயர்ந்தவர்களுக்கு**

புறுபுறுப்பவர்: **மறுத்தான் மோனா**

உடுப்புக்கடைகளில் உள்ள Change room களுக்குள் தடல்புடலா செல்ல முயன்று... sorry..sorry என்று அசடு வழிய திரும்புவோரை அனேகமாக பல இடங்களில் காணலாம்.

எங்கட பல வீடுகளில் பார்த்தா...Privacy என் பது ஒரு சொட்டு மருந்துக்குக் கூட கிடை யாது. உள்ள வீடுகளின் கதவுகளுக்கோ அல் லது அதன் பூட்டுகளுக்கோ வேலையே கிடைப் பதில்லை. Always open policy.

Party களுக்குப் போனா எங்கட பிள்ளைகள் சரி பெரியவர்கள் சரி கண்டபடி washroom கதவுகளைத் திறப்பதைக் காணக் கூடியதாக இருக்கும். அதன் கதவைத் தட்டி யாரும் உள்ளே இருக்கின்றார்களா? என்று அறிந்த பின்னர் கதவைத் திறக்கும் பழக்கத்தை கொஞ்சம் கூட இவர்களிடம் காண முடியாது.

இப்படி பல சம்பவங்களை கூறிக் கொண்டு போனாலும் இவற்றை சற்று யதார்த்தமாக சிந்தித்துப் பார்த்தால்... ஒரு அலுவலகத் திற்குள் செல்ல முன்னர்... அதன் கதவு மூடி யிருக்கின்றதோ... இல்லையோ... அதை ஒரு தட்டுத்தட்டி உள்ளே இருப்பவரின் அனுமதி யுடன் செல்வது ஒரு நல்ல வழக்கம்.

இது பலபேருக்கும் சாதாரண விடயமாகத் தான் இருக்கும் ஆனால் இது பல இடங் களில் உங்களைப் பற்றி ஒரு தவறான அபிப் பிராயத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது திட்டுக்களும் வாங்கவேண்டி வரும்.

எந்தவொரு washroom கதவைத் திறக்கும் முன்னர் அது வீட்டிலோ அல்லது பொது இடங் களிலோ இருக்கலாம்... அதன் கதவைத் தட்டி யாரும் உள்ளே இருக்கிறார்களா என்று அறிந்து கதவைத் திறப்பது ஒரு அவசியமான நல்ல விடயம். இது எமக்கு மட்டுமல்ல மற்ற வர்களுக்கும் அசௌகரியம் கொடுப்பதைத் தவிர்க்கும்.

**எப்ப ஒரு வழக்கத்தை எம் வாழ்வோடு முழுமையாக இணைத்துக் கொள்கின்றோமோ அப்போதுதான் அந்த வழக்கம் எந்த இடத்திலும் எம்முடன் தொடர்ந்து வரும்.**

பல வீடுகளில் உள்ள அறைகளில் கதவுகளைத் தட்டாமல் திறக்கும் வழக்கத்தை அதிகமானவர்களிடம் காணக்கூடியதாக இருக்கிறது.

'இது நம்ம வீடுதானே' என்று அதைப்பற்றி எதுவித அக்கறையும் காட்டாமல் விட்டு விடுவார்கள். ஆனால் எமது குழந்தைகள் எம் மிடம் இருந்துதானே அதிக பழக்க வழக்கத்தைப் பழகிக் கொள்கின்றன என்பதை முற்றாகவே மறந்து விடுகின்றார்கள்

எப்ப ஒரு வழக்கத்தை எம் வாழ்வோடு முழு மையாக இணைத்துக் கொள்கின்றோமோ அப்போதுதான் அந்த வழக்கம் எந்த இடத் திலும் எம்முடன் தொடர்ந்து வரும். இல்லா விடில் அவை எல்லாம் பேச்சளவில் மட்டுமே இருந்துவிடும். அத்துடன் வழக்கங்களின் ஆரம் பம் எமது வீடுகள்தான் என்பதை மறந்து விடக் கூடாது.

இது போன்ற சில விடயங்களில் அக்கறை காட்டுவதன் மூலம் எம்மை நாம் ஒரு நேர்த்தியான பாதையில் வழி நடத்திச் செல்ல முடியும்.

வாழ்க்கை அனுபவப் பாடங்களை கணக்கில் எடுக்காமல் நிஜவாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு மனிதரைப் பொறுத்தவரை பெருமைப்பட வேண்டிய விடயமாக இருக்காது.

சமுதாயத்தின் எந்த ஒரு மூலையிலும் அரும் பியுள்ள எந்தவொரு ஆக்கபூர்வமான நடை முறையையோ... அல்லது நல்ல பழக்க வழக்கங்களோ... எமது வாழ்வியலை முன்னேற்ற உதவும் என்றால் நாம் அதை எவ்வித மறுப்புமின்றி தழுவிக் கொள்ள வேண்டும். இதுவே ஒரு ஆரோக்கியமான மனிதனுக்குத் தேவையானது.

கடந்தவைகளை மறந்து காலம் மற்றும் இடத்திற்கு ஏற்றவாறு எமது வழக்கங்களை மாற்றி சமுதாய நீரோட்டத்தில் கலப்பது இன்று எல்லோருக்கும் அவசியமானதொன்றாக இருக்கின்றது.

'திறந்த வீட்டில் அல்லது அறையில் எது பூரும்'... நிச்சயமாக நீங்கள் அல்ல...

## சாமி

எங்கள் குடிசையில்
அடிக்கடி சாமி ஆடுவாள் அம்மா
ஏனோ தெரியவில்லை
அன்றும் இன்றும்
குடிசைக்கே வருகிறது சாமி
மாடிக்கே போகிறது வரம்

- *காசி ஆனந்தன்*


# MARKANDAN & UDDIN SOLICITORS

Solicitors & Administrators for Oath

M Markandan LLB A Uddin ( Hons ) MA LLB Phd-RFL

Tamil House, 720 Romford Rd, London E12 6BT

**We specialise in ..**
For all your needs in immigration ( All aspects upto house of lords ),
Commercial & Residential Conveyencing, Employment,
Civil Litigation, Consumer Problems, Last will, Power of Attorney,
Spnsorship Declaration, HSMP, Workpermits

MARKANDAN & UDDIN

**விவாக விண்ணப்பம்**

**01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்தநாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.**

**அகதி விண்ணப்பம்**

**14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்மந்தமான ஆலோசனைகள்**

**விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடையங்கள் No win no fee அடிப்படையில்**

Markandan & Uddin Solicitors

**tel 020 8514 8300 / 07830 285 634 | fax 020 8514 8381**
**email info@msssolicitors.com**
**Markandan : 07956 386 576 | Uddin : 07957 455 670**